**19.12.2022**

**OS.No. 525/2021 DW : 1 , திரு. ராகவன்**

**குறுக்கு விசாரணை ... (வாதி தரப்பில்)**

என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். நான் 12ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். அதுபோக சிவில் டிராப்ஸ்மேன் படித்திருக்கிறேன். எனக்கு ஆங்கிலம் ஓரளவிற்கு படிக்க தெரியும். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதற்கான ஆவணங்கள் இல்லை. நான் எந்த மருத்துவரிடம் அட்டன்டராக வேலை பார்த்து வருகிறேன் என்று முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் அப்துல் அமீது என்ற மருத்துவரிடம் வேலை பார்த்தேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. கணேஷ் என்ற மருந்து கடையை சாந்தி என்பவர் பெயரில் உரிமம் வாங்கி பட்டாபிராமில் நடத்தி வந்தேன். அதற்குரிய ஆவணம் தான் பிசாஆ1 ஆகும். அந்த கடையில் உள்ள விற்பனை வரி கணக்கை தாக்கல் செய்யவில்லையா என்று கேட்டால் ரூபாய் 10 லட்சத்திற்கு மேல் விற்பனை இல்லாததால் விற்பனை வரியை தாக்கல் செய்யவில்லை. பிசாஆ1-க்கு ஆதரவாக வேறு ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. அக்டோபர் 2001ல் மருந்து கடையை 3ஆம் நபருக்கு ரூபாய் 1 லட்சத்து 40 ஆயிரத்திற்கு விற்றுவிட்டதற்கு நான் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. கணேஷ் மெடிக்கல் எனக்கு சொந்தமானது இல்லை என்றால் சரியல்ல. பிவாஆ1ல் உள்ள பெயரை மட்டும் வைத்துக்கொண்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறனே் என்றால் சரியல்ல. அந்த கடை எனக்கு சொந்தமானது இல்லை

என்றும் ஆகவே தான் விற்பனை வரி ரிட்டன்ஸ்-ஐ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அப்துல் அமீது என்ற மருத்துவரை விசாரித்தால் நான் அவரிடம் வேலை பார்த்த விவரம் தெரியுமா என்று கேட்டால் அவர் காலமாகிவிட்டார். வழக்கிற்காக எனக்கு சொந்தமில்லாத ஒரு கடையை என் கடை போன்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த தொழிலோ வருமானமோ இல்லை என்றும் வாதி மற்றும் அவரது தந்தையும் என் மீது பரிதாபப்பட்டு தாவா சொத்தை என் பெயரில் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வீடு கட்ட வாதி தான் பணம் கொடுத்து உதவினார் என்றால் சரியல்ல. வங்கியில் கடன் வாங்குவதற்கு எனக்கு வருமானம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தாதால் என் தம்பி வருமான வரி ரிட்டன்ஸ் வைத்திருந்ததால் வங்கி வருவமான வரி ரிட்டன்ஸ் வைத்திருப்பவர்களுக்கு மட்டும் கடன் கொடுக்க முடியும் என்று சொன்னதால் என் தம்பி அவராகவே வந்து வங்கியில் நானும் அவரும் கடன் கேட்டோம். நான் பொய் சொல்லுகிறனே் என்றும் என் தம்பி தான் வீடு கட்ட உதவினார் என்றால் சரியல்ல. வருமானம் இருந்தால் தான் வங்கி கடன் கொடுக்கும் என்று சொன்னால் எனக்கு வருமானம் இருந்தது. வாதி தான் எனக்கு வங்கியில் கடன் வாங்கி கொடுத்தார் என்றும் அதில் தான் வீடு கட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியும் என் பெற்றோர்களும் ஒன்றாக குடியிருந்தார்கள். நான்

வில்லிவாக்கத்தில் தனியாக குடியிருந்தேன். வாதி அவர் தொழிலில் உள்ள வருமானத்தில் இருந்து என் தந்தையின் பென்சன் பணத்தை வைத்தும் அவர்கள் என் குடும்பத்தை காப்பாற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வருமானம் இல்லை என்பதால் என் தந்தையுடன் மணவாளநகருக்கு குடியேறி அவருடன் சேர்ந்து குடியிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆவதற்கு முன்னர் என் தந்த்யுடன் மணவாளநகரில் குடியிருந்தேன். நான் என் மனைவி குழந்தையுடன் மணவாளநகரில் என் பெற்றோர்களுடன் அவர்கள் கடையை நடத்தி வந்தததால் அவர்களுடன் சேர்ந்து குடியிருந்தேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு மறதி நோய் இருந்தது. அந்த நோய் எப்போதிலிருந்து அவருக்கு இருந்தது என்று எனக்கு நியாபகம் இல்லை. என்னுடைய தந்தைக்கு வாதி தான் செலவு செய்து சிகிச்சை அளித்தார் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தைக்கு நான் சிகிச்சைக்கு மருத்து வாங்கி கொடுத்தேன் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் இல்லை. என் தந்தை மறதி நோய்க்கு என்ன மருந்தை சாப்பிட்டார் என்றும் என்ன சிகிச்சை பெற்றார் என்றும் எனக்கு நியாபகம் இல்லை. என் பெயரிலும் வாதி பெயரிலும் கூட்டாக கிரயம் வாங்க என் தந்தை பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தான் சொத்தை வாங்கினேன். என் தந்தையின் பென்சன் பணத்தை வைத்து தான் தாவா சொத்தை காலி மனையாக நான் கிரயம் வாங்கினேன் என்றால் சரியல்ல. என் தந்தை தான் எனக்கு வீட்டு கடன் வாங்கிக்கொடுக்கும்படி வாதியிடம்

சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை 2003ல் இறந்த பிறகு அவர் எப்படி வாதியிடம் சொல்லியிருக்க முடியும். நான் 2003ல் வங்கியில் கடன் வாங்கி. 2003-லேயே வீடு கட்ட ஆரம்பித்தேன். மாதம் நியாபகம் இல்லை. என் தந்தை இறந்த பிறகு தான் வீடு கட்ட ஆரம்பித்தேன். என் தந்தை உயிருடன் இருந்தபோது தான் வீடு கட்ட ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல. நான் காலி மனையை கிரயம் வாங்கியதால் தான் வங்கி எனக்கு கடன் கொடுத்தது. வாதி கொடுத்த கடனை வைத்து தான் நான் வீடு கட்டினேன் என்றால் சரியல்ல. வங்கியில் கடனை நான் தான் அடைத்தேன். அதற்கான ஆவணங்கள் என்னிடம் இல்லை. அது தொலைந்து விட்டது. கடனை திரும்ப செலுத்தியதற்கான ஆவணங்களை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. கட்டிடம் கட்ட வாதி தான் நிதி உதவி செய்தார் என்றும் ஆகவே தான் அவர் உரிமையாளர் என்ற முறையில் தாவா சொத்தில் தரைதளத்தில் தன் தாயாருடன் குடியிருந்தார் என்றால் சரியல்ல. ஆனால் அவர் தரைதளத்தில் குடியிருக்கிறார். என் மனைவியின் சுமார் 30 பவுன் நகைகளை மார்வாடி கடையில் விற்றேன். தேதி, மாதம், வருடம் நியாபகம் இல்லை. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. வங்கிக்கடன் எப்போது அடைக்கப்பட்டது என்று எனக்கு சரியாக தெரியாது. என் மனைவியின் நகைகளை நான் விற்கவில்லை என்றும் ஆகவே தான் அதற்கான ரசீது எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி கூட்டுக்குடும்பம் என்று

சொல்லாதபோது எதைவைத்து கூட்டுக்குடும்பம் என்று நான் சொல்லுகிறேன் என்று கேட்டால் நான் கூட்டுக்குடும்பம் என்று சொல்லவில்லை. காலி மனை என் பெயரில் இருந்ததால் மட்டும் வங்கிகடனுக்கு என் பெயரை சேர்த்தார் என்று சொன்னால் சரியல்ல. வாதி தான் வங்கிக்கடன் முழுவதையும் அடைத்தார் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவிக்கு இருதய நோய் இருக்கிறது என்பதற்கான ஆவணங்கள் இருக்கிறது ஆனால் அதை தாக்கல் செய்யவில்லை. என் மகனை வாதி தான் படிக்க வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரை நான் ஒருநாள் கூட மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. என் தாயாரை 2016. 2017ல் பில்ரோத் மருத்துவமனையில் அனுமதித்தோம், தேதி நியாபகம் இல்லை. பில்ரோத் மருத்துவமனையில் ரேடியேசன் செய்தததாகவும் இராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் சாட்சி சாட்சியம் அளித்துள்ளார். தாவா சொத்தை அபகரிப்பதற்காக புது கதைகளை கூறி வருகிறேன் என்றால் சரியல்ல. என் உடன் பிறந்தவார்கள் 5 சகோதரிகள், 2 சகோதரர்கள். என் சகோதரிகள் எனக்கு சாதகமாக சாட்சி சொல்ல வருவார்களா என்றால் வாதி அவர்களை விலை கொடுத்து வாங்கிவிட்டார். அவர்கள் வரமாட்டார்கள். நான் என் தாயாருக்கு ஒருவேளை சாப்பாடு கூட கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரை வாதி தான் பராமரித்து சிகிச்சை செய்தார் என்றால் சரியல்ல. சொத்திற்காக தற்போது தான் அவர் என் தாயாரை பராமரித்து வருகிறார். என்

தாயாரை விசாரித்தால் உண்மை தெரியுமா என்று கேட்டால் அவரை விசாரிக்கலாம். அவருக்கு 90 வயதாகவிட்டதால் முன்னுக்குபின் முரணாக பேசுவார். என் தாயாருக்கு ஒரு அறை இருந்தது என்றும் அதையும் நான் பூட்டிவைத்து விட்டேன் என்றால் அது மாடியில் உள்ள அறையாகும். என் தாயார் கீழ்தளத்தில் குடியிருக்கிறார். அந்த அறையை கொடுக்கும்படி என் தாயார் கேட்டார் என்றும் நான் மறுத்துவிட்டேன் என்று சொன்னால் அந்த அறை மாடியில் இருப்பதாலும் என் தாயாருக்கு கால் உடைந்துவிட்டதாலும் அவருக்கு மாடியில் உள்ள அறையை கொடுக்கவில்லை. அந்த அறையில் தற்போது என் மகன் குடியிருக்கிறார். தற்போது என் தாயார் தரைதளத்தில் குடியிருக்கிறார். மாடியில் உள்ள அறையை என் தாயார் என் சகோதரிகளை பார்ப்பதற்காக அவர் செலவழித்து கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரை என் குடும்பத்தார் துன்புறுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. என் தாயார்அவரை நான் பராமரிக்கவில்லை என்று என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்று கேட்டால் வாதியும் என் சகோதரிகளும் அவரை துண்டி விட்டு மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுக்க வைதத்தார்கள். அது காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டது. என் தயார் என்னை பராமரிக்கவில்லை என்றும் என் சகோதரிகள் என்னுடன் சண்டை போட்டார்கள் என்று சொன்னால் என் சகோதரிகள் என்னிடம் சொத்து கேட்டு சண்டைபோட்டார்கள். வாதி வாடகை செலுத்தி வருகிறார் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. மாத

வாடகை ரூபாய் 750 என்பதாலும் அவர் தம்பி என்பதாலும் ஆவணங்கள் இல்லை. நானும் வாதியும் வாடகை ஒப்பந்தம் செய்துகொண்டோமா என்று கேட்டால் அவர் என் தம்பி என்பதால் வாடகை ஒப்பந்தம் எதுவும் எழுதிக்கொள்ளவில்லை. என் தம்பி வாடகைதாரராக இல்லை என்றும் ஆகவே தான் அவர்மீது நான் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய எதிர் கோரிக்கை தள்ளுபடி செய்ப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் என்னைவிட வாதிக்கு தான் அதிகம் உரிமை இருக்கிறது என்றால் சரியல்ல. அவர் தான் அதிகம் செலவு செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. என் மாமனார் உதவியுடன் நான் வீடு கட்டினேன் என்பதற்கு ஆவணங்கள் இல்லை. மாமனார் உதவியதற்கெல்லாம் ஆவணங்கள் இருக்க முடியாது. வாதிக்கு தாவா சொத்தில் பாதி பங்கு இருக்கிறது என்றும் தரைதளத்தில் அவர் பாகத்திற்கு ஒதுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகன் வாதியின் மனையிடம் தவறாக நடந்துகொண்டான் என்றும் அது தான் பிரச்சனைக்கு காரணம் என்றால் சரியல்ல. என் மகனுக்கு 14 வயது. அவன் எப்படி சித்தியிடம் தவறாக நடந்துகொள்ள முடியும். வாதி என்னிடம் கேட்டார் என்றும் நான் வாதியை அடிக்க சென்றேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.